## கல்வித் தளத்தில் மட்டுமல்லாது, பட்டியலின

# மக்களின் உரிமைகளுக்காக - பெண்ணுரிமைக்காகப் போராடியவர் பேராசிரியர் திருமதி வசந்திதேவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல் செய்தி!

**சென்னை, ஆக.3-**

**மூத்த கல்வியாளர் பேராசிரியர் திருமதி. வசந்திதேவி அவர்கள் நேற்று இயற்கை யெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகி றோம்.**

**இச்செய்தியறிந்ததும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், "கல்வித் தளத்தில் மட்டுமல்லாது பட்டியலின மக்களின் உரிமைகளுக்காகவும், பெண்ணுரிமைக்காகவும் போராடியவர் பேராசிரியர் திருமதி. வசந்தி தேவி" என்று குறிப்பிட்டுள்ளார்.**

**மூத்த கல்வியாளர் பேராசிரியர் திருமதி. வசந்தி தேவி அவர்களின் மறைவையொட்டி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:-**

மூத்த கல்வியாளரான பேராசிரியர் திருமதி. வசந்தி தேவி அவர்கள் மரணமடைந்த செய்தியறிந்து மிகுந்த வேதனையடைந்தேன்.

நெல்லை மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர், மாநில மகளிர் ஆணையத் தலைவர், தமிழ்நாடு திட்டக் குழு உறுப்பினர் உள்ளிட்ட பல்வேறு உயர் பொறுப்புகளில் மிகச் சிறந்த பங்களிப்பினை ஆற்றியதோடு, சமூகத்தின் மீதும் பெரும் அக்கறை கொண்டவராகப் பேராசிரியர் வசந்தி தேவி அவர்கள் திகழ்ந்தார்.

தமிழ்நாடு தொடர்ந்து எதிர்த்து வரும் 'தேசிய கல்விக் கொள்கை 2020'இன் தீமைகள் குறித்தும் மிகத் தீவிரமான பரப்புரையை அவர் மேற்கொண்டிருந்தார். பல்கலைக்கழக மானியக் குழுவின் புதிய வரைவு நெறிமுறைகளுக்கு எதிராகவும் உறுதியாகத் தனது கருத்துகளை முன்வைத்து வந்தார். அனைவருக்கும் சமச்சீரான கல்வி கிடைக்க வேண்டும் என இறுதி மூச்சு வரையில் போராடி வந்த திருமதி. வசந்தி தேவி அவர்கள், கல்வியானது மாநிலப் பட்டியலில் மீண்டும் சேர்க்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தி வந்தவர் ஆவார்.

கல்வியில் மதவாதம், வியாபாரம், ஒன்றிய அரசின் அதிகாரக் குவிப்பு ஆகியவற்றுக்கு எதிராகத் தொடர்ந்து பேசி வந்தார். கல்வித் தளத்தில் மட்டுமல்லாது பட்டியலின மக்களின் உரிமைகளுக்காகவும் பெண்ணுரிமைக்காகவும் போராடிய செயற்பாட்டாளர் திருமதி. வசந்தி தேவி.

நமது திராவிட மாடல் அரசு பள்ளிக் கல்வித் துறையில் தொடங்கிய கலை வகுப்புகள், தேன்சிட்டு சிறார் இதழ் உள்ளிட்ட முன்னெடுப்புகளுக்குப் பாராட்டு தெரிவித்தும், திட்டங்கள் தொடர்பாக ஆலோசனைகள் வழங்கியும் ஊக்கப்படுத்தியவர்.

அவரது திடீர் மறைவு கல்வித் துறை மற்றும் மனித உரிமைச் செயற்பாட்டுக் களத்தில் ஈடு செய்ய முடியாத இழப்பை ஏற்படுத்தியுள்ளது. அன்னாரை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தினர், கல்விப்புலத்தைச் சேர்ந்த அறிஞர்கள், சமூகச் செயற்பாட்டாளர்கள், மாணவர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## ஆளில்லா லெவல் கிராசிங்குகளை அகற்றிட

# ரயில்வே அமைச்சகம் காலக்கெடு நிர்ணயித்துள்ளதா?

## மக்களவையில் சி.என்.அண்ணாதுரை கேள்வி!



புதுடெல்லி, ஆக. 3–

நாட்டிலுள்ள ஆளில்லா லெவல் கிராசிங்குகளை அகற்றிட ரயில்வே அமைச்சகம் காலக்கெடு ஏதாவது நிர்ணயித்துள்ளதா என்று மக்களவையில் திருவண்ணாமலை தொகுதி உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை கேள்வி எழுப்பினார்.

(அ) நாட்டில், குறிப்பாக தமிழ்நாட்டில், மாவட்ட வாரியாக, ஆளில்லா லெவல் கிராசிங்குகளின் (ULC) எண்ணிக்கையின் விவரங்கள்;

ஆ) செயல்பாட்டு ரயில் பாதைகளில் உள்ள அனைத்து ஆளில்லா லெவல் கிராசிங்குகளையும் அகற்றுவதற்கு அரசாங்கம் ஏதேனும் காலக்கெடுவை நிர்ணயித்துள்ளதா, அப்படியானால், அந்த மாநிலத்தில் இலக்கு மற்றும் தற்போதைய முன்னேற்றம் குறித்த விவரங்கள்:

(இ) மேற்படி மாநிலத்தில் கைவிடப்பட்ட/செயல்படாத ரயில் கடவைகளை அரசாங்கம் கவனத்தில் கொண்டதா, அப்படியானால், அதன் விவரங்கள்;

(ஈ) பாதசாரிகள் மற்றும் பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு ஒரு காலக்கெடு நிர்ணயிக்கப்பட்டுள்ளதா, அப்படியானால், அதன் விவரங்கள்;

(உ) தமிழகம் முழுவதும் ஆளில்லா லெவல் கிராசிங்குகள் அகற்றப்பட்ட/நிரந்தரமாக மூடப்பட்ட நடைமேம்பாலம், சுரங்கப்பாதைகள் மற்றும் சாலை மாற்றுப்பாதைகள் போன்ற இடங்களில் பயணிகளுக்குச் செய்யப்பட்ட மாற்று ஏற்பாடுகளின் விவரங்கள்; மற்றும்

(ஊ) மேற்படி மாநிலத்தில் லெவல் கிராசிங்குகளில் பொதுப் பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளான வாயில்கள் நிறுவுதல், விழிப்புணர்வு பிரச்சாரங்கள், பணியாளர்களைப் பணியமர்த்தல் மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த தலையீடுகள் ஆகியவற்றின் விவரங்கள் யாவை?

இவ்வாறு அவர் கேள்விகள் கேட்டிருந்தார்.

## ஈரோடு – திருப்பூர் – நாமக்கல் போன்ற ஊரக மாவட்டங்களில்

# ஓய்வு பெற்ற முன்னாள் இராணுவ வீரர்களுக்கு கொடுக்க வேண்டிய பாக்கிகள் எவ்வளவு?

## மக்களவையில் கே.இ.பிரகாஷ் கேள்வி!



புதுடெல்லி, ஆக.3–

மக்களவையில் ஈரோடு தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ. பிரகாஷ் எழுப்பிய கேள்விகளும் ஒன்றிய அமைச்சர் அளித்த பதிலும் வருமாறு:–

(அ) ஒரே தரத்தில் ஓய்வூதியம் (OROP) திட்டம் தற்போது எவ்வாறு நடைமுறையில் இருக்கிறது? இதுவரை எத்தனை வழக்குகள் நிலுவையில் உள்ளன என்பதைத் தெரிவிக்கவும்.

(ஆ) ஓய்வூதியம் காலதாமதமின்றி வழங்குவதற்காக கடந்த இரண்டு ஆண்டுகளில் SPARSH இணையதளத்தில் எவ்விதமான தொழில்நுட்ப/நிர்வாக மேம்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்பதைத் தெரிவிக்கவும்.

(இ) தமிழ்நாட்டின் ஈரோடு, திருப்பூர், நாமக்கல் போன்ற ஊரக மாவட்டங்களில் ஓய்வுபெற்ற முன்னாள் இராணுவ வீரர்களுக்கு கொடுக்க வேண்டிய ஓய்வூதிய பாக்கிகள் எவ்வளவு உள்ளது என்பதைத் தெரிவிக்கவும்.

ஒன்றிய அரசின் பதில் வருமாறு:–

(அ) பாதுகாப்புப் படைகளின் ஓய்வூதியத் தொகை 01.07.2014 முதல் One Rank One Pension (OROP) திட்டத்தின் கீழ் ஐந்தாண்டு ஒருமுறை திருத்தம் செய்யப்பட்டு வருகிறது. இதன் அடிப்படை யில், இரண்டாவது மற்றும் மூன்றாவது ஓய்வூதியத் திருத்தங்கள் 01.07.2019 மற்றும் 01.07.2024 ஆகிய தேதிகளில் அமல்படுத்தப்பட்டு உள்ளன. OROPI மற்றும் OROPII திட்டங்களின் அடிப்படையில் நிலுவையில் இருந்த தொகைகள் தகுதியுடைய பாதுகாப்புப் படை ஓய்வுபெற்றவர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளன. OROPIII திட்டத்தின் கீழ், திருத்தப்பட்ட ஓய்வூதியத் தொகையும் அதற்கான நிலுவைத் தொகையும் 25.20 லட்சம் தகுதியான ஓய்வுபெற்ற பாதுகாப்புப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) கடந்த இரண்டு ஆண்டுகளில் SPARSH போர்டலில் செய்யப்பட்ட தொழில்நுட்ப மற்றும் நிர்வாக முன்னேற்ற ங்கள் விவரங்கள் பின்வருமாறு:

(i) SPARSH (System for Pension Administration – Raksha) என்பது ஒன்றிய அரசின் Digital India திட்டத்தின் ஒரு பகுதியாகும். இது அக்டோபர் 2020 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இந்தத் திட்டத்தின் மூலம் பாதுகாப்பு படை மற்றும் பாதுகாப்பு துறை சிவிலியன்களுக்கான ஓய்வூதியங்களை அனுமதிப்பதும் நேரடியாக அவர்களது வங்கி கணக்குகளுக்கு செலுத்துவதும் ஆகியவை செயல்படுத்தப்படுகிறது. இது ஓய்வூதிய நிர்வா கத்தை முழுமையாகவும். வெளிப்படையாகவும், சுலபமாகவும் செய்து தரும் ஒரு அமைப்பாக செயல்படுகிறது.

(ii) தற்போது, 31 லட்சத்துக்கும் அதிகமான பாதுகாப்புப் படை ஓய்வு பெற்றவர்கள் (சேவை உறுப்பினர்கள் மற்றும் பாதுகாப்புத் துறையில் பணியாற்றிய சிவிலியன் கள் உட்பட) SPARSH போர்டலில் இணைக்கப்பட்டுள்ளனர். இவர்களின் ஓய்வூதியத் தொகைகள் SPARSH மூலம் நேரடியாக அவர்களின் வங்கிக் கணக்குகளில் செலுத்தப்படுகின்றன.

(iii) கடந்த இரண்டு ஆண்டுகளில் SPARSH போர்டலில் உருவாக்கப்பட்ட முக்கியமான வசதிகள் பின்வருமாறு:

(அ) Reservist Pension

(ஆ) Invalid Pension

(இ) Prorata Pension for PBOR

(ஈ) LTA (Life Time Arrears)

(உ) Fixed Medical Allowance (FMA) updation

(ஊ) IT saving for Jeevan Raksha Padak

(எ) Integration with TRACES for Form16

(iv) நேபாளத்தை பூர்வீகமாகக் கொண்ட Gorkha (NDG) ஓய்வுபெற்றவர்கள் இப்போது SPARSH வாயிலாக ஓய்வூதியம் பெற முடியும். இவர்கள் தற்போது Nepal SBI Bank மற்றும் Everest Bank Ltd. வாயிலாக ஓய்வூதியம் பெற்றுவருகின்றனர். NDG மற்றும் NRI ஓய்வுபெற்றவர்களுக்கு உதவ SPARSH சேவையை விரிவுபடுத்தும் நோக்கில், ஒரு தனிப்பட்ட Email ID உருவாக்கப்பட்டுள்ளது.

(v) SPARSH போர்டலில் செய்யப்பட்ட முக்கிய தொழில்நுட்ப மேம்பாடுகள்,

இணைப்பு வேகம் 256 MBPS ஆக அதிகரிக்கப்பட்டு, சேமிப்பு வசதி 600 GBயிலிருந்து 200 TB ஆக உயர்த்தப்பட்டுள்ளது. மேலும், Mobile Applicationயும் மேம்படுத்தப்பட்டுள்ளது.

(இ) தமிழ்நாட்டில் உள்ள கிராமப்புற மாவட்டங்களில் வசிக்கும் ஓய்வு பெற்ற பாதுகாப்புப் பணியாளர்களுக்குக் கொடுக்க வேண்டிய ஓய்வூதிய நிலுவைத் தொகை தொடர்பான தனியான தரவுகள் இல்லை.

இவ்வாறு ஒன்றிய அமைச்சர் பதிலளித்தார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சைதை கா. கிட்டு

### ஆகஸ்ட் 3 (2011)



**இளம்வயதிலேயே கழகத்தில் ஈடுபாடு கொண்டு, சைதை தொகுதி 139வது வட்டத்தில் சார்புமன்ற செயலாளராகப் பொறுப்பேற்று, பின்னர் படிப்படியாக வட்டப் பொறுப்பாளர், பொதுக்குழு உறுப்பினர், பகுதிக் கழகப் பொறுப்பாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆகிய பொறுப்புக்களை வகித்ததோடு, 1991 முதல் 2003ஆம் ஆண்டு வரை தென்சென்னை மாவட்டக் கழகச் செயலாளராக பொறுப்பேற்று கழகப் பணியாற்றியவர்.**

**1996ல் சைதை சட்டமன்றத் தொகுதியில் கழக வேட்பாளராக போட்டியிட்டு வெற்றி பெற்று, சிறப்பாக பணியாற்றி அத்தொகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.**

**தலைவர் கலைஞர் அவர்களால் 'சைதை கிட்டு – செயலில் சிட்டு' என்று பாராட்டப்பட்டதோடு, "சைதைத் தொகுதியில் நான் நிற்க வேண்டுமென்று பேரறிஞர் அண்ணா அவர்களால் கட்டளையிடப்பட்டபோது, இங்கே நான் நிற்கிறேனா – சைதை கிட்டு நிற்கிறாரா என்ற சந்தேகம் ஏற்படும் அளவுக்கு அரும்பணியாற்றியவர் தம்பி கிட்டு" என தலைவர் கலைஞர் தனது இரங்கலில் குறிப்பிட்டுள்ளார்.**

### தலைமைக் கழகம்
### தி.மு.க.



கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணைக்கிணங்க கழக இளைஞரணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆலோசனையின் படி மதுரை வடக்கு மாவட்ட திமுக சார்பில் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு மதுரை மேலூர் தொகுதிக்குட்பட்ட கிராமப் பகுதிகளில் குடும்ப அட்டைதாரர்களுக்கு நலத்திட்ட உதவிகளை மாவட்டச் செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி வழங்கினார். உடன் கழக நிர்வாகிகள், கழகத்தினர் மற்றும் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் பங்கேற்றனர்.

## அடுத்த 3 ஆண்டுகளில் அதிகரித்து வரும்

# மின்தேவையை பூர்த்தி செய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

## மக்களவையில் டி.எம். கதிர்ஆனந்த் கேள்வி !



புதுடெல்லி, ஆக. 3-

தமிழ்நாட்டின் மின் உற்பத்தித் திறன் குறித்து நாடாளுமன்ற மக்களவையில் வேலூர் தொகுதி உறுப்பினர் டி.எம்கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்

அடுத்த மூன்று ஆண்டுகளில் தமிழ்நாட்டில் அதிகரித்து வரும் மின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில், தெற்கு மின் இணைப்பு வழியாக மின் உற்பத்தி திறன் மற்றும் மின் பகிர்வு சுமை ஓட்டத்தை அதிகரிக்க ஒன்றிய அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா, அப்படியானால், அதன் விவரங்கள் யாவை?

தமிழ்நாட்டில் மின் உற்பத்தி திறனின் தற்போதைய நிலை மற்றும் அடுத்த மூன்று ஆண்டுகளில் அதன் மின் உற்பத்தி திறனில் எதிர்பார்க்கப்படும் அதிகரிப்பு குறித்து விவரம் தருக?

குறிப்பாக தமிழ்நாட்டில் மின் உற்பத்தியில் புதிய தனியார் நிறுவனங்களை ஊக்குவிக்கவும், இடமளிக்கவும் ஒன்றிய அரசு போதுமான நடவடிக்கைகளை எடுத்துள்ளதா, அப்படியானால், அதன் விவரங்கள் தருக?

இதற்கு ஒன்றிய அரசின் மின்சார அமைச்சர் மனோகர் லால் எழுத்துப் பூர்வமாக அளித்த பதில் வருமாறு:

தமிழ்நாட்டில் நிறுவப்பட்ட மின் உற்பத்தித் திறன் 43,107 மெகாவாட் ஆகும். அடுத்த மூன்று ஆண்டுகளில் மாநிலத்தில் மின் உற்பத்தித் திறனை அதிகரிக்க பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன:

(i) மாநிலத் துறையில் 3,440 மெகாவாட் வெப்பத் திறனும் 500 மெகாவாட் சேமிப்புத் திறனும் அடுத்த மூன்று ஆண்டுகளில் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

(ii) அடுத்த மூன்று ஆண்டுகளில் இயக்க திட்டமிடப்பட்டுள்ள அணுசக்தித் திட்டங்களிலிருந்து தமிழ்நாடு சுமார் 2,151.8 மெகாவாட் பங்கை தமிழ் நாடு பெறும்.

(iii) அடுத்த மூன்று ஆண்டுகளில் மாநிலத்தில் சுமார் 6,000 மெகாவாட் புதுப்பிக்கத்தக்க மின்சாரம் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது.

(iv) பிரதான் மந்திரி கிசான் உர்ஜா சுரக்ஷா ஏவம் உத்தான் மகாபியான் (PMKUSUM), PM சூர்யா கர் முஃப்த் பிஜிலி யோஜனா, கடல் காற்று மின் திட்டங்களுக்கான செயல்திறன் இடைவெளி நிதி (VGF) திட்டம் போன்ற திட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

765 kV மற்றும் 400 kV கூடுதல் உயர் மின்னழுத்த (EHV) AC இணைப்புகள் மற்றும் +/800 kV உயர் மின்னழுத்த (HV) DC அமைப்பு ஆகியவற்றைக் கொண்ட உயர் திறன் கொண்ட மின்மாற்ற வழித்தடங்கள் மூலம் தமிழ்நாடு தேசிய மின்மயமாக்கலுடன் நன்கு இணைக்கப்பட்டுள்ளது, இது தமிழ்நாடு மற்றும் பிற தென் பிராந்திய மாநிலங்கள் / தேசிய மின்கட்டமைப்பு இடையே மாநிலங்களுக்கு இடையேயான மின்மாற்ற அமைப்பு (ISTS) நெட்வொர்க் மூலம் சீரான மின்சார பரிமாற்றத்தை எளிதாக்குகிறது.

பல்வேறு பிராந்தியங்களுக்கு இடையேயான இணைப்புகள் அதாவது. நரேந்திர (SR) புனே (WR) 765 kV D/c பாதை, அங்குல் (ER) ஸ்ரீகாகுளம் (SR) 765 kV 2வது D/c பாதை மற்றும் பிதார் (SR) பர்லி (WR) 765 kV D/c பாதை ஆகியவை செயல்படுத்தலின் வெவ்வேறு கட்டங்களில் உள்ளன. இந்த இடை பிராந்திய இணைப்புகள் தெற்கு பிராந்தியத்தின் உச்ச தேவை காலத்தில் தமிழ்நாடு உட்பட தெற்கு பிராந்தியத்தின் இறக்குமதி தேவைகளைப் பூர்த்தி செய்வதில் உதவுகின்றன. இந்த இணைப்புகள் தெற்கு பிராந்தியத்திலிருந்து உபரி மின்சாரத்தை ஏற்றுமதி செய்வதற்கும் உதவும்.

(c): மின்சாரச் சட்டம் 2003 இன் படி, மின்சாரம் உற்பத்தி என்பது உரிமம் பெறத் தேவையற்ற (உரிமம் இல்லா) செயலாகும்.

தமிழ்நாடு உட்பட நாட்டில் மின் உற்பத்தியில், குறிப்பாக புதுப்பிக்கத்தக்க துறையில் தனியார் நிறுவனங்களின் முதலீட்டை ஊக்குவிக்க இந்திய அரசு பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இவற்றில், பிறவற்றுடன், பின்வருவன அடங்கும்:

கடல் காற்றாலை மின் திட்டங்களை செயல்படுத்துவதற்காக, 1 GW கடல் காற்றாலை மின் திட்டங்களை நிறுவுவதற்காக, மொத்தம் ரூ. 7,453 கோடி செலவில், செயல்திறன் இடைவெளி நிதி (VGF) திட்டத்தை அரசாங்கம் அங்கீகரித்துள்ளது, இதில் 500 MW தமிழக கடற்கரையில் நிறுவப்பட உள்ளது.

மேலும், மாநிலத்தில் மின் உற்பத்தியில் தனியார் துறையின் பங்களிப்பை ஊக்குவிக்க தமிழ்நாடு அரசு பின்வரும் நடவடிக்கைகளை எடுத்துள்ளது:

(i) தனியார் டெவலப்பர்களின் பங்களிப்பை ஊக்குவிக்கும் வகையில், மின்சக்தி சேமிப்பு திட்டங்கள் மற்றும் சிறிய நீர் மின் திட்டங்களை (100 KW முதல் 10 MW வரை) நிறுவுவதற்கான கொள்கைகள் தமிழ்நாடு அரசால் வெளியிடப்பட்டுள்ளன.

(ii) தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களில் மொத்தம் 13,500 மெகாவாட் திறன் கொண்ட மின்சக்தி சேமிப்புத் திட்டங்கள் திட்டமிடப்பட்டுள்ளன, மேலும் அவை பொது தனியார் கூட்டு முறையில் நிறுவப்பட உள்ளன.

(iii) சுயமாக அடையாளம் காணப்பட்ட மின் சக்தி சேமிப்புத் திட்டங்கள் மற்றும் சிறிய நீர் மின் திட்டங்களின் மேம்பாட்டிற்காக, ஆர்வ வெளிப்பாடு மூலம் டெவலப்பர்கள் அடையாளம் காணப்பட்டு, ஒதுக்கீடு செயல்பாட்டில் உள்ளனர்.

இவ்வாறு அமைச்சர் தனதுபதிலில்கூறியுள்ளார்.




தேனி வடக்கு மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் தேனி தனியார் மண்டபத்தில் வடக்கு மாவட்ட செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி. தலைமையில் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. உடன் சரவணகுமார் எம்.எல்.ஏ. மாநில இளைஞரணி துணை செயலாளர் ஜி.பி.ராஜா சிறப்புரை உரையாற்றினார் .தொகுதி பார்வையாளர்கள் முத்துராமலிங்கம், நேருபாண்டியன், வடக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆசிப் கான் மற்றும் ஒன்றிய செயலாளர்கள், நகர செயலாளர்கள், பேரூர் செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள், இளைஞரணி துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.